

நேற்று (29.10.2025) தென்காசி மாவட்ட அரசு விழாவில் கலந்துகொள்ள செல்லும் வழியில், சுரண்டை நகராட்சி, கீழசுரண்டையில் சமீபத்தில் நடைபெற்ற சிலம்பாட்ட போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்கள் சிலம்பம் சுற்றி அளித்த உற்சாக வரவேற்பின்போது, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அம்மாணவர்களுடன் சிலம்பம் சுற்றி உற்சாகப்படுத்தினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.10.2025) தென்காசியில் நடைபெற்ற அரசு விழாவில், மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கி, அவர்களுடன் உரையாடினார். இந்நிகழ்வின்போது, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் ஆகியோர் உடனிருந்தனர்.

### “கலைஞரின் கனவு இல்லம்” திட்டத்தின் கீழ் தென்காசி மாவட்டம், கழுநீர்குளம் ஊராட்சியில்

# செல்வி பிரேமா குடும்பத்திற்காக கட்டப்பட்டு வரும் வீட்டின் கட்டுமானப் பணிகள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வு செய்தார்!

சென்னை, அக். 30-

சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் 25.9.2025 அன்று நடைபெற்ற தமிழ்நாட்டின் மாபெரும் கல்வி எழுச்சியின் கொண்டாட்டமான “கல்வியில் சிறந்த தமிழ்நாடு” நிகழ்ச்சியில், தென்காசி மாவட்டம், கழுநீர்குளத்தைச் சேர்ந்த மாணவி பிரேமா மழைக்காலங்களில் ஒழுகும் பழைய வீட்டில் தனது பெற்றோருடன் வசித்து வருதாக கண்ணீர் மல்க பேசியிருந்தார். மாணவி பிரேமா பேசிய 24 மணி நேரத்தில், அவருக்கு “கலைஞர் கனவு இல்லம்” திட்டத்தின் கீழ் அரசு வீடு வழுங்கிட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டு, அதன்படி அம்மாணவியின் தாயார் திருமதி முத்துலெட்சுமி அவர்கள் பெயரில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கான ஆணை அடுத்தநாளே வழங்கப்பட்டது.

இதுகுறித்து முதலமைச்சர் அவர்கள் தனது சமூக வலைதளப் பதிவில், “ஒழுகும் வீட்டில் அப்பா இருப்பாரே என்ற கவலை பிரேமாவுக்கு இனி வேண்டாம். எத்தனையோ பேரின் எதிர்ப்பையும் மீறி உங்களைப் படிக்க வைத்த தந்தையிடம், முதல் மாதச் சம்பளத்தைத் தந்து நீங்கள் மகிழ்ச்சி அடைந்தீர்கள். உங்கள் கனவை நிறைவேற்றிய தந்தைக்குக் ‘கலைஞர் கனவு இல்லம்’ திட்டத்தின்கீழ் புதிய வீடு கட்டிக் கொடுப்பதற்கான ஆணையை வழங்கி நான் மகிழ்ச்சி கொள்கிறேன்” என்று தெரிவித்திருந்தார்.





தென்காசி மாவட்ட அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக நேற்று (29.10.2025) தென்காசி மாவட்டத்திற்கு வருகை தந்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், 25.9.2025 அன்று சென்னையில் நடைபெற்ற ”கல்வியில் சிறந்த தமிழ்நாடு நிகழ்ச்சியில், ஒழுகும் வீட்டில் அப்பா வசித்து வருதாக கண்ணீர் மல்க பேசிய மாணவி பிரேமா அவர்களுக்கு வீடு வழங்க உத்தரவிட்டு, அதன்படி ”கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கழுநீர்குளத்தில் கட்டப்பட்டு வரும் அவ்வீட்டின் கட்டுமானப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, செல்வி பிரேமாவின் பெற்றோர் சு.ராமசாமி திருமதி ரா. முத்துலெட்சுமி ஆகியோரை சந்தித்தார். இந்த நிகழ்வின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி கருணாநிதி உள்பட அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

இந்நிலையில், தென்காசி மாவட்ட அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக நேற்று (29.10.2025) தென்காசிக்கு வருகை தந்த முதலமைச்சர் அவர்கள், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கழுநீர்குளத்திற்கு நேரில் சென்று செல்வி பிரேமா அவர்களின் தாயார் திருமதி ரா. முத்துலெட்சுமி, தந்தை சு. ராமசாமி ஆகியோரை சந்தித்து, கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் அவர்களது வீட்டின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு, அவர்களுடன் உரையாடினார்.

மேலும், செல்வி பிரேமாவிடம் முதலமைச்சர் அவர்கள் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு, உங்கள் வீடு கட்டி கொண்டிருக்கும் இடத்தில் இருந்து தான் பேசுகிறேன், இன்னும் இரண்டு மாதங்களில் வீடு கட்டி முடிக்கப்படும் என்று தெரிவித்தார். அதற்கு செல்வி பிரேமா அவர்கள் முதலமைச்சர் அவர்களுக்கு தனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டார்.

இந்த நிகழ்வின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன் தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஆணையர் பா. பொன்னையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

### நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில்

# வில்லிவாக்கம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் டிசம்பரில் மக்களிடம் ஒப்படைப்பு!

## புதிய குடியிருப்புகளில் 496 குடும்பங்கள் குடியேறுவார்கள் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, அக். 30-

வில்லிவாக்கம், காந்தி நகர், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் நிச்சயமாக டிசம்பர் மாதத்திற்குள் மக்களிடம் ஒப்படைக்கப்பட்டு, 2026 ஜனவரி மாதம் தைத் திருநாளையும் தமிழ் புத்தாண்டையும் முன்னிட்டு, புதிய குடியிருப்புகளில் ஏற்கனவே வசித்த 496 குடும்பங்களும் குடியேறுவார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (29.10.2025) சென்னை, வில்லிவாக்கம், மண்டலம்8, வார்டு96, நியூ ஆவடி சாலையில் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் கட்டப்பட்டு வரும் காந்தி நகர் புதிய அடுக்குமாடி குடியிருப்புகளின் முன்னேற்றப் பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரரை அறிவுறுத்தினார்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது:

திராவிட மாடல் ஆட்சியில் “குடிசை மாற்று வாரியம்” என்று இருந்ததை மாற்றி “வாழ்விட மேம்பாட்டு வாரியம்” என பெயர் மாற்றம் செய்யப்பட்டு, அதன் சார்பில் 25 ஆண்டுகளுக்கு மேலாக சிதிலமடைந்த நிலையில் இருந்த குடியிருப்புகளை முழுமையாக அகற்றி, புதிய குடியிருப்புகள் கட்டும் திட்டம் கொண்டு வரப்பட்டது.





சென்னை, வில்லிவாக்கம், மண்டலம்–8, வார்டு–96, நியூ ஆவடி சாலையில் நேற்று (29.10.2025) தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் கட்டப்பட்டு வரும் காந்தி நகர் புதிய அடுக்குமாடி குடியிருப்புகளின் முன்னேற்றப் பணிகளை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரரை அறிவுறுத்தினார்.

மாவட்ட அமைச்சராக உள்ள எங்கள் பகுதியில், பி.ஆர். கார்டன் பகுதி, நேர்மை நகர் பகுதி, சேத்துப்பட்டு, எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வேம்புலி அம்மன் திட்ட பகுதி, கொய்யா தோப்பு திட்ட பகுதி, எம்.எஸ். நகர் திட்ட பகுதி போன்ற இடங்களில் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த பணிகளை விரைவு படுத்தும் நோக்கில், துறையின் செயலாளர் திருமதி காகர்லா உஷா அவர்கள், அந்தந்த தொகுதிகளுக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் துறை, மின்சார துறை, சென்னை மாநகராட்சியின் அதிகாரிகள் ஆகியோர் ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். வில்லிவாக்கம், காந்தி நகர், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுமான பணிகள் நிறைவடைந்தவுடன், குடியிருப்புகளுக்கு தேவையான மின்சாரம், குடிநீர் வசதி, கழிவுநீர் வசதி போன்ற அனைத்தும் துரிதமாக ஏற்பாடு செய்யப்படுகின்றன.

இந்த கட்டுமானப் பகுதிகளில் ஏற்கனவே 496 குடியிருப்புகள் இருந்தன. தற்போது 500 குடியிருப்புகளை அமைக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. முன்பு இருந்த 317 சதுர அடிக்கு பதிலாக தற்போது 417 சதுர அடியாக புதிய குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன.

காந்தி நகர் திட்ட பகுதியில் ஏற்கனவே வசித்து வந்த மக்களுக்கு, மறுகட்டுமானம் முடியும் வரை வெளியில் தங்குவதற்காக முந்தைய காலங்களில் மாதம் ரூ.8,000 இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டது. தற்போதைய ஆட்சியில், மக்களின் நலனை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அந்தத் தொகை ரூ.24,000 ஆக உயர்த்தியுள்ளார். மறுகட்டுமானம் முடியும் வரை மாதந்தோறும் அந்தத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், தமிழக முதல்வர் ஆட்சி பொறுப்பு ஏற்ற பிறகு, கூடுதலாக கட்டப்படும் இடங்களின் பரப்பளவைப் பொருத்து முன்பு வசூலிக்கப்பட்ட கூடுதல் தொகை தொடர்பாக மக்களின் மனநிலை கருத்தில் கொண்டு, மாதாந்திர தவணை முறையில் கட்டணத்தை செலுத்தும் வகையில் புதிய ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது. இது ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்கள் வசிக்கும் வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பாளர்களுக்கு பெரிதும் உதவியாக உள்ளது.

இந்த திட்டப் பகுதிகளைப் பொருத்த அளவில், நிச்சயமாக டிசம்பர் மாதத்திற்குள் குடியிருப்புகள் மக்களிடம் ஒப்படைக்கப்பட்டு, ஜனவரி மாதம் தைத் திருநாளையும் தமிழ் புத்தாண்டையும் முன்னிட்டு, புதிய குடியிருப்புகளில் ஏற்கனவே வசித்த 496 குடும்பங்களும் குடியேறுவார்கள் என நம்பிக்கையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பள்ளிக்கரணை சதுப்புநிலத்தில் கட்டிட அனுமதி குறித்த செய்தியாளர் கேள்விக்கு அமைச்சர் பி.கே. சேகர்பாபு பதில்:**

ஊடக நண்பர்களே, இதுகுறித்து நேற்று முழுமையாக விளக்கம் அளிக்கப்பட்டு, பல ஊடகங்களில் பெரிதும் செய்தியாக வந்தது. கேள்வி எழுப்பிய அன்புச் சகோதரி அவர்களுடைய தொலைக்காட்சியிலும் இதுவே பெரிய செய்தியாக வெளியானது.

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் நிலைப்பாடு தெளிவானது - சட்ட விதிமீறல்கள் இருந்தால், ஒரு இமி அளவு கூட அனுமதி வழங்கப்படாது. கட்டிடங்கள் முடிக்கப் பட்ட பின்னரும் Completion Certificate (CC) வழங்கும்போது சிறிய விதி மீறல் இருந்தாலும் அனுமதிக்கப்படாது. சட்டத்திற்குட்பட்ட ஆட்சி என்பது தமிழக முதல்வர் அவர்களின் கொள்கை. எனவே, வழங்கப்படும் அனைத்து அனுமதிகளும் சட்டப்படி வழங்கப்பட்டவையே. இது குறித்து அரசின் சார்பில் நேற்று தெளிவான விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் 888 கோடி ரூபாய் முறைகேடு குற்றச்சாட்டு குறித்த செய்தியாளர் கேள்விக்கு அமைச்சர் அவர்களின் பதில்:

சில அரசியல் கட்சித் தலைவர்கள், திராவிட மாடல் ஆட்சி மக்களுக்கு நன்மை செய்து வருவதால், இந்த ஆட்சியை எதிர்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு செயல்படுகின்றனர். அதனால்தான் இவ்வாறான குற்றச்சாட்டுகள் எழுப்பப்படுகின்றன. எங்காவது புகார் எழுந்திருந்தாலும், அதற்கான அனைத்து விளக்கங்களையும் அந்தத் துறையின் அமைச்சர் இன்று வெளியிட்டுள்ளார். ஊடக நண்பர்களும் அதைக் கவனித்திருப்பீர்கள்.

ஏற்கனவே ஒன்றிய அரசுடன் கூட்டணியில் இருக்கும் கட்சிகள், தேர்தல் நெருங்கும்போது இது போன்ற முயற்சிகளில் ஈடுபடுவது வழக்கமானது. ஆனால் இதனை எதிர்கொள்ளும் தைரியமும் நெஞ்சுவலிமையும் கொண்டவர் தமிழக முதல்வர் தலைமையிலான எங்கள் ஆட்சியே...” இவ்வாறு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் வெற்றி அழகன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைமைப் பொறியாளர் கிருஷ்ணசாமி, கண்காணிப்புப் பொறியாளர் இளம்பரிதி, மண்டலக் குழுத்தலைவர் கூ.பீ. ஜெயின், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.தனலட்சுமி, செம்மொழி, உள்ளாட்சி பிரதிநிதிகள் வே.வாசு, வேதா, மின்சாரத்துறை, சென்னை குடிநீர் வடிகால் வாரியம், காவல்துறை மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

---

# விழுப்புரம் தெற்கு மாவட்ட செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

## டாக்டர் பொன் கௌதம சிகாமணி வேண்டுகோள்!

விழுப்புரம், அக். 30-

விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதம சிகாமணி அறிக்கை வருமாறு:

கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ மற்றும் தேர்தல் மண்டல பொறுப்பாளர், கடலூர் கிழக்கு மாவட்ட செயலாளர், வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வழிகாட்டுதலின்படி விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க செயற்குழு அவசர ஆலோசனை கூட்டம் 30.10.2025 (வியாழக்கிழமை) காலை 10.00 மணிக்கு விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள தளபதி அரங்கில் விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.



சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா , மாவட்ட அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன் , தலைமைக் கழக தொகுதி பொறுப்பாளர்கள் ஜி.கார்த்திகேயன், சிவ. ஜெயராஜ், தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை.சுரேஷ் , மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் மோ. தேன்மொழி , மாவட்ட துணை செயலாளர்கள் டி. என்.முருகன் , இரா.கற்பகம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ள கூட்டத்தில் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.